III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.
O.S.29/2013

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Tmt.R.Santhi, Translator
in accordance with the provision of Act I for 1873 on 21-07-2025

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜான் வெஸ்லி | Village | : |
| Father's / Husband's Name | : வேதநாயகம் | Calling | : |
| Age | : | Taluk | : |

2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

(சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு 2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.)

அசல் வழக்கு எண்.2/2012 வழக்கின் வாதி மனோவா. நான் அவ்வழக்கில் 2 ம் பிரதிவாதி. அவ்வழக்கில் 23.04.2012 ல் நான் கூடுதல் எதிர் வழக்குரையை தாக்கல் செய்திருக்கிறேன். இவ்வழக்கின் வழக்குரையையும் அசல் வழக்கு எண்.2/2012 வழக்கில் என்னுடைய கூடுதல் எதிர்வழக்குரையையும் தாக்கல் செய்தது ஒரே வழக்கறிஞர் தான் என்றால் முதலில் வழக்கறிஞர் ஏ.எஸ்.மதிவாணனை வைத்திருந்தேன். பின்பு வழக்கறிஞரை மாற்றிவிட்டேன். நான் சொல்லுகின்ற வழக்கறிஞர் திரு.மதிவாணன் தான் அசல் வழக்கு எண்.2/2012 வழக்கில் என்னுடைய கூடுதல் எதிர்வழக்குரையை தாக்கல் செய்திருக்கிறார். நான் என்னுடைய கூடுதல் எதிர் வழக்குரையில் நான் ஏற்கனவே தாக்கல் செய்த எதிர் வழக்குரையோடு சேர்த்து இந்த கூடுதல் எதிர் வழக்குரையை படித்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் மனோவாவுக்கு தான் இந்த சொத்தை கொடுக்க எனக்கு விருப்பம். நான் மனோவா சொல்லிக்கொடுத்து தான் நான் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அசல் வழக்கு எண்.2/2012 வழக்கில் தாக்கல் செய்திருக்கிற கூடுதல் வழக்குரையில் பத்தி 5 ல் நான் தற்பொழுது நான் மதுவிற்கு அடிமையானவன் என்றும் அதிலிருந்து மீளமுடியாத அளவிற்கு சென்றுவிட்டேன் என்றும் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. அதே கூடுதல் எதிர் வழக்குரை பத்தி 11 ல் அசல் வழக்கு எண்.2/2012 பிரதிவாதி 3 மற்றும் 4 ஆகியோர் என்னை ஓசோன் rehabilitation centre-ல் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டேன் என்று சொல்லப்பட்டிருக்கிறது என்றால் என்னை துரைராஜ்

மருத்துவமனையில் சேர்த்தார். 19.02.2012 முதல் 23.04.2012 வரை நான் அந்த மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்தேன் என்றால் உள்நோயாளி என்றால் என்ன? என்னை அங்கு கொண்டுபோய் சேர்த்தார்கள். அங்கு சாப்பாடு போட்டார்கள். மீண்டும் 02.10.2012 முதல் 10.10.2013 வரை அதே மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்தேன் என்று கூடுதல் வழக்குரையில் சொல்லியிக்கிறேன் என்றால் துரைராஜ்க்கு எதிராக வந்துவிடபோகிறேன் என்பதால் என்னை அங்கு கொண்டுபோய் சேர்த்தார். என்னை ஏன் அங்கு சேர்த்தார் என்று எனக்கு தெரியவில்லை. நான் ஏன் என்று கேட்டபொழுது நான் இங்கு தான் இருந்தாக வேண்டும் என்று கூறினார். இந்த விவரங்களை நான் என்னுடைய கூடுதல் வழக்குரையிலியோ இந்த வழக்குரையிலோ சொல்லவில்லை என்றால் இவர்களாக சேர்த்ததற்கு நான் ஏன் இதனை சொல்ல வேண்டும். குடிப்பழக்கத்திற்கு உள்ளானவர்களை தான் இந்தமாதிரி rehabilitation centre-ல் சேர்ப்பார்கள் என்றால் துரைராஜ் தான் என்னை சேர்த்துவிட்டார். என்னை அவருக்கு சாதகமாக வரவேண்டும் என்பதற்காக என்னை சேர்த்துவிட்டார். நான் rehabilitation centre-ல் இருந்தபொழுது வெளியே வந்திருக்கிறேனா என்றால் துரைராஜ் என்னை கோர்ட்டுக்கு கூட்டி வந்தார். நான் என்னுடைய வழக்குரையில் ஆந்திராவில் கடத்தி கொண்டுபோய் வைத்துத் தான் வழக்கிற்கு கூட்டி வந்தார் என்று சொல்லியிருக்கிறேன் தவிர rehabilitation centre-ல் இருந்து கூட்டி வந்ததாக சொல்லவில்லை என்றால் வழக்கறிஞர் திரு.ஏ.எஸ்.மதிவாணன் தான் என்னை காப்பாற்றினார். நான் தாக்கல் செய்திருக்கின்ற வா.த.சா.ஆ.4 காவல் ஆணையரிடம் கொடுத்ததாக சொல்லப்படும் புகாரில் மனோவா, பிலால், துரைராஜ், அன்பு ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கூறியிருக்கிறேன் என்றால் இதில் உள்ள கையெழுத்து போல என்னிடம் நிறைய கையெழுத்து வாங்கியிருக்கிறார். அப்படி தான் இந்த complaint ல் உள்ள கையெழுத்தை நான் போட்டேன். இந்த விவரங்களை எல்லாம் என்னுடைய அசல் வழக்கு எண்.2/2012 ல் கூடுதல் வழக்குரையில் சொல்லவில்லை என்றாலும் தற்பொழுதுதான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் 1 ஆம் பிரதிவாதி பவர் ஏஜெண்ட் என்ற முறையில் வழக்கு சொத்தை 2 ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்தது செல்லாதது என்று கோரி இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். பவர் ஏஜெண்ட் சதிஸ்க்கு எதிராக விற்பனை பணத்தை கேட்டு தனி வழக்கு தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் ஆமாம் பணத்தை கேட்டு வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். அந்த வழக்கின் விவரங்களை சொல்லமுடியுமா என்றால்

மாண்புமிகு உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன். வழக்கின் எண் எனக்கு ஞாபகம் இல்லை. எந்த வருடம் என்றால் 2012 ஆ, 2013 ஆ என்று எனக்கு ஞாபகம் இல்லை. இவ்வழக்கிலும் அசல் வழக்கு எண்.2/2012 ல் நான் இது போன்ற விவரங்களை சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய கூடுதல் எதிர் வழக்குரையில் 2ம்பிரதிவாதி துரைராஜ் 2011ல் தாவா சொத்தை என்னை ஏமாற்றி பெற்றுக்கொண்டார் அவர் மீது வழக்கு தொடுக்க போகிறேன் என்று எந்த விவரமும் சொல்லவில்லை என்றால் நான் துரைராஜ் கஸ்டடியில் இருந்தபொழுது எப்படி இதை நான் பன்னமுடியும். அவரிடமிருந்து தப்பி வந்த பிறகு தான் மதிவாணனிடம் புகார் கொடுத்தேன். 1ம் பிரதிவாதி சதிஸ் 2ம் பிரதிவாதி துரைராஜ்க்கு விற்பனை செய்த தொகையை எனக்கு 1ம் பிரதிவாதி தரவில்லை என்பதால் தான் இவ்வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் வழக்குரையில் நான் என்னை மனோவாவும் சேர்ந்து தான் ஏமாற்றினார் என்று கூறியிருக்கிறேன் என்றால் மனோவா என்னை ஏமாற்றவில்லை. 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு வழக்கு சொத்தை பொறுத்து கிரையம் முடித்து கொடுத்தபொழுது நான் சார்ப்பதிவாளர் அலுவலத்தில் இருந்தேனா என்றால் முதல் பத்திரம் முடிக்கும்பொழுது நான் இருந்தேன். அதன்பிறகு மூன்று பத்திரங்கள் முடிக்கும்பொழுது நான் இருந்தேன். பிறகு பத்திரங்கள் பற்றி எனக்கு தெரியாது. சாட்சி தற்பொழுது 3 ஆ, 4 ஆ என்று எனக்கு தெரியாது என்று கூறுகிறார். தாவா சொத்தை விற்பனை செய்த பொழுது 1ம் பிரதிவாதியிடம் 2ம் பிரதிவாதி கிரையத்தொகையை கொடுத்துவிட்டார் என்றாலும் நான் அங்கு இல்லாததால் அது பற்றி எனக்கு தெரியவில்லை என்றால் எனக்கு பணமே கொடுக்கவில்லை. எனக்கு பணம் கொடுக்கவில்லை என்றால் நான் 1ம் பிரதிவாதிக்கு எதிராக மட்டுமே வழக்கு தாக்கல் செய்ய முடியும் என்றாலும் 2ம் பிரதிவாதிக்கு எதிராக நான் எந்த பரிகாரமும் கோர முடியாது என்றால் சரியல்ல. நான் சதிஸ்க்கு எதிராக பணம் கேட்டு வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்று சாட்சியம் அளித்திருப்பதால் இந்த வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.2/2012 தொடர்புடைய வழக்கின் அட்டவணை ஏ சொத்து விற்பனை தொடர்பாக 2ம் பிரதிவாதி துரைராஜ் என்னுடைய வங்கி கணக்கிற்கு கேட்போலை மூலமாக ரூ.90 லட்சம் செலுத்தியிருக்கிறார் என்றால் சரியல்ல. அது போலி செக்காக இவர் காட்டியிருக்கிறார். அதனை போலிசும் கண்டுபிடித்துவிட்டார்கள். 2011 முதல் 2019 வரையிலான காலகட்டத்திற்குண்டான என்னுடைய வங்கி கணக்கின் விவரங்களை பார்வையிட்டால் இந்த விவரம் எனக்கு தெரியவரும் என்றால் நான்

பேங்க் பாஸ்புக்கை பார்த்ததே இல்லை. என்னிடம் கொடுத்ததும் கிடையாது. நான் என்னுடைய வங்கி கணக்கு விவரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக இருக்கின்றேன். நான் தாக்கல் செய்திருக்கின்ற பிரமாண வாக்குமூலம் பத்தி 4 ல் என்னுடைய கடன் பிரச்சனைகளை தீர்ப்பதற்காக இந்த வழக்கு சொத்தை விற்க என்னுடைய நண்பர் பிலாலுக்கு பவர் கொடுத்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். நான் என்னுடைய வழக்குரையில் இந்த சங்கதி பற்றி கூறாமல் புதியதாக என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் மட்டும் இந்த சங்கதி பற்றி கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் என்னுடைய வழக்குரை பத்தி 6 ல் 2 ம் பிரதிவாதி துரைராஜ் என்னை அணுகி வழக்கு சொத்தை நல்ல விலைக்கு வாங்கிக்கொள்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சாட்சி என்னை கடத்தி கொண்டுபோய் தான் 2 வது அக்ரிமெண்ட் போட்டார்கள். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் வழக்குரையில் சொல்லாத சங்கதிகளை சொல்லி தாக்கல் செய்திருப்பதால் என்னுடைய வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை விற்பனை செய்து 2 ம் பிரதிவாதியிடம் இருந்து 90 லட்சம் ரூபாயை வாங்கிகொண்டு அவரை ஏமாற்றவேண்டும் என்பதற்காக மனோவாவுடன் சேர்ந்து பொய்க்கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. கேட்போலை மூலமாக 90 லட்சம் ரூபாய் பெற்றுக்கொண்டது போக நான் 2 ம் பிரதிவாதியிடம் இருந்து ரொக்கமாக 1 கோடிக்கும் மேலாக பணம் பெற்றுக்கொண்டிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் துரைராஜிடம் இருந்து எந்த பணமும் வாங்கவில்லை. வழக்கு சொத்தில் 3 கடை 5 வீடு வாடகைக்கு விடப்பட்டிருந்தது. மாதம் 30 ஆயிரம் ரூபாய் வாடகை வந்தது. நான் வழக்கு சொத்தில் 4 கடைகளும் 17 வீடுகளும் இருந்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அசல் வழக்கு எண்.2/2012 வழக்கில் சொல்லப்பட்ட சொத்துக்குரிய மொத்த கிரையத் தொகையும் பெற்றுக்கொண்டுவிட்டேன் என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

(1ம் பிரதிவாதி ஆஜரில் இருந்தார். தனது வழக்கறிஞர் மூலமாக சட்சியை குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் வேண்டும் என்று கோரி அவகாசம் வழங்கப்பட்டது.)